# வெள்ளிச் சுரங்களின்

வெள்ளிச் சுரங்களின் அலைகளிலே துள்ளி வருகின்ற சந்தங்களே
உள்ளம் கனிந்த என் நன்றியினை சொல்லிப் பாடுங்களே –
எந்தன் தேவனுக்கே

**1**
கருவினில் என்னை அறிந்தவன் கண்மணி
போல வளர்த்தவன்
அறுவடை மிகுந்த பணியிலே அடியேன்
என்னை அழைத்தவன்
அருகிலிருந்து ஆற்றல் பொழிந்து நிலையானந்தம் தருபவன் - அந்த நல்ல
தேவனுக்கே என் நன்றியைக் கூறுங்களே

**2**
கொடுப்பதில் இன்பம் வைத்தவன் - தன்னையே
உண்ணக் கொடுப்பவன்
படிப்பினைகள் சொல்லியவன் சொன்னபடியே வாழ்ந்தவன்
இடுக்கண்ணுற்று வீழும் போது எனக்காய்
உயிர் தருபவன் அந்த நல்ல தேவனுக்கே என்
நன்றியைக் கூறுங்களே